# கலைஞரும் நானும்

111

“பேனா ஒரு செங்கோல். ஆனால், இலக்கியவாதிகளில் ஒருவரைக்கூட அரசனாகக் காண்பது அவ்வளவு அரிதாக இருக்கிறது” என்பது கலீல்கிப்ரானின் ஒரு கவிதை வாசகம். அப்படி இலக்கியவாதிகளில் அரசராக விளங்கிய அரிதான ஒருவர் கலைஞர் என தனது நினைவுகளைப் பகிர்கிறார் கவிஞர் பழநிபாரதி.

## கடைசி வரை கலைஞர்!

கவிஞர் பழநிபாரதி





உச்சரிக்கும்போதே மூச்சுக்குழலில் ஒரு சக்தி பிறக்கும் பெயர், கலைஞரின் பெயர். அவர் இன்று இல்லை என்பதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. இன்று தமிழ்நாடு அடைந்துள்ள உயரமும், ஒவ்வொரு துறையிலும் ஓர் உச்சபட்ச அடையாளமும் அவர் உருவாக்கி வைத்தவை.

எங்கள் குடும்பம் சென்னையில் வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தவரே, தலைவர் கலைஞர் அவர்கள்தான். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் மாணவராய் இருந்து, குன்றக்குடி அடிகளாரின் உதவியாளராக இருந்து, கவிஞர் கண்ணதாசனால் சென்னைக்கு அழைத்து வரப்பட்டவர்தான் எனது தந்தையார் கவிஞர் சாமி.பழனியப்பன்.

### நாடறிந்த கவிஞர்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட என் அப்பா, தந்தை பெரியாரால் ஈர்க்கப்பட்டு, பள்ளிச் சான்றிதழ்களை எல்லாம் கிழித்துப் போட்டுவிட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். அந்தச் சான்றிதழ்களை மீண்டும் அவர் மீட்டெடுக்க முயற்சிக்கவில்லை. சில காலத்திற்குப் பிறகு சென்னைக்கு வந்த அவர் வேலையில்லாமல் வறுமையில் வாடியபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்தான் என் தந்தைக்கு அரசு வேலை வழங்கி ஆணையிட்டார். கலைஞர் அவர்கள் ‘தமிழரசு’ பத்திரிகையில் எனது தந்தையாருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், என் தந்தையின் கைகளில் பள்ளிச் சான்றுகள் இல்லாததால், அதிகாரிகள் ஆட்சேபணை தெரிவித்தனர்.

அப்போது தமிழரசு’ இதழ் பொறுப்பில் இருந்த கவிஞர் கருணானந்தம், உடனே இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய யோசித்து, ‘சாமி.பழனியப்பன் நாடறிந்த கவிஞர் என்பதால், இவருக்கு அரசுப் பணி வழங்கலாம்’ என்று சான்றிதழ் வழங்கினார். இதையே அரசுக் கோப்புகளில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் எழுதி இருந்தார். இதைத் தொடர்ந்து 70-களில் அப்பாவுக்குத் ‘தமிழரசு’ பத்திரிகையில் வேலை கிடைத்தது.

### தலைவரின் பேச்சு

சின்னஞ் சிறு வயதிலேயே பெரும்பாலும் கலைஞர் பேசும் கூட்டங்களுக்கு, கவியரங்கங் களுக்கு என்னை எனது தந்தையார் கூட்டிச் செல்வார். அப்படித்தான் அன்றும் போய் இருந்தேன். அன்று அண்ணா மேம்பாலம் திறப்பு விழா. கலைஞரின் உரையைக் கேட்க கோடம்பாக்கத்திலிருந்து அண்ணா மேம்பாலத்திற்கு முரசொலி சங்கரய்யாவோடு பேசிக்கொண்டே என்னையும் அப்பா அழைத்துச் சென்றார். தலைவரின் பேச்சைக் கேட்டுவிட்டு, நடந்தே வீடு வந்து சேர்ந்தோம். அப்போதிருந்தே நான் கலைஞரின்பால் அவரது வசீகரக் குரலாலும் வார்த்தைகளாலும் ஈர்க்கப்பட்டேன்.

1997–98 ஆகிய ஆண்டுகளில் எனக்கு மூன்று விருதுகள், தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் வழங்கப்பட்டன. ஒரு விருது, **‘காதலுக்கு மரியாதை’** படத்துக்கு சிறந்த பாடலாசிரியருக்கான விருது. இன்னொன்று **கலைமாமணி விருது**. மற்றொன்று, **கலைத்துறை வித்தகர் கண்ணதாசன் விருது**. இந்த மூன்று விருதுகளும், எனக்கு அவரது திருக்கரங்களால் வழங்கப்பட்டன. இதற்கு நன்றி சொல்வதற்காக, கோபாலபுரம் இல்லத்திற்கு நான் சென்றிருந்தேன்.

அப்போது என் தந்தையையும் உடன் அழைத்துச் சென்றிருந்தேன். அந்த வேளையில், அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இருந்து ஒரு பிரமுகர், தலைவர் அவர்களைச் சந்திக்க வந்திருந்தார். நான் செல்வதற்கு ஐந்து நிமிடங்கள் தாமதம் ஆகிவிட்டது. அதனால் தலைவர் அவர்கள் மாடியில் இருந்து இறங்கி வந்துவிட்டார். நான் படிக்கட்டுகளிலேயே நின்று கொண்டிருந்தேன். கடைசியாக இரண்டு படிக்கட்டுகள் இருக்கும் போது, என்னுடைய தோளில் கைவைத்துக்கொண்டு படி இறங்கினார். அப்போது நான் கொண்டு போயிருந்த பொன்னாடையை, அவரிடம் கொடுத்து விட்டு நன்றியுணர்வோடு வாழ்த்துப் பெற்று வந்தேன்.

**அவருடைய பேனாவில் ரோஜாக்களும் பூத்திருக்கின்றன. ரத்தமும் கசிந்திருக்கிறது. இன்பத்திலும் துன்பத்திலும் அவர் இறுக்கமாகப் பற்றியிருந்தது பேனாவை மட்டும்தான்.**

என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு உன்னதமான தருணம் அது. நான் தாமதமாகச் சென்று இருந்தபோதும் வாஞ்சையோடு என் தோள்களின் மீது அவர்கள் கை பட்டது எனக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருந்தது.

### நிமிர்ந்து ஒரு பார்வை

மற்றொரு முறை தலைமைச் செயலகத்தில், தலைவர் அவர்கள் இருந்தபோது இலங்கைத் தமிழர்களுக்காக ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் நிதி கொடுக்கச் சென்றிருந்தார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள் சார்பாக நாங்களும் ஒரு குழுவாகச் சென்றிருந்தோம் அப்போது, ஒவ்வொருவரும் அவரவர் பெயரைச் சொல்லி, நிதியளிக்கையில் அவருக்குத் தெரிந்த பெயர் வரும்போது அண்ணாந்து ஒரு பார்வை பார்ப்பார். அது ஆயிரம் அர்த்தங்கள் சொல்லும். ஈரோடு தமிழன்பன் என்று சொல்லும் போது, நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார். ‘நல்லாருக்கீங் களா’ என்று கேட்டார். அப்படி என் முறை வந்து, நான் நிதியை வழங்கும்போது, ‘நம்ம பழநிபாரதி’ என்று சொன்னார். இந்த ‘நம்ம’ என்ற அந்த ஒரு வார்த்தை போதுமானதாக இருந்தது எனக்கு. நான் அவரது இல்லத்திலும், உள்ளத்திலும் இருக்கிறேன் என்பதற்கு அது அட்சரமாக அமைந்தது.

கவிஞர் வாலி அவர்கள் எழுதிய **‘கலைஞர் காவியம்’** ஒளிப்பேழையாக அதாவது சி.டியாக பதிவு பெற்று அதன் வெளியீட்டு விழாவுக்கான அழைப்பிதழைக் கலைஞருக்குக் கொடுப்பதற்காக அவர் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது நான் காவியக் கவிஞர் வாலி வீட்டுக்குச் சென்றிருந்தேன். உடனே அவர், “யோவ் பழநி... கலைஞரைப் பார்க்கப் போறேன். நீயும் வர்றியா?” என்று என்னிடம் கேட்டார். ‘சரி’ என்று அவரோடு சென்றேன்.

கோபாலபுரம் வந்ததும், "நீ கீழேயே இருய்யா.கலைஞரிடம் உன்னைப் பற்றி சொல்கிறேன். அவர் அழைத்தால் மேலே வா’ என்றார். நான் கீழேயே இருந்து கொண்டேன். வாலி அவர்கள் மேலே போய் அழைப்பிதழைக் கொடுக்கச் சென்றார். கலைஞரிடம் என்னைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லி, உடன் வந்திருப்பதையும் தெரிவித்திருக்கிறார். சில நிமிடங்களில் கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன் அவர்கள், தலைவர் அழைப்பதாக என்னை மேலே போகச் சொன்னார்.

வாலி அவர்கள், கலைஞரிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, ‘கவிஞர் எனக்குப் பழநிபாரதியை அறிமுகம் செய்கிறார்’ என்று மெல்லிய புன்னகை செய்தார் கலைஞர்.

அதன் பிறகு, நாங்கள் இருவரும் காரில் புறப்பட்டு வீட்டுக்குத் திரும்பினோம். கவிஞர் வாலி அவர்கள், “உன்னை முன்னாடியே தெரியும் என்று காட்டிக் கொள்ளாமல், புதுசா தெரிந்துகொள்வது போல நம்முடைய சந்திப்பையே எவ்வளவு சுவாரசியமாக மறக்க முடியாத சந்திப்பாக மாற்றிவிட்டார் பார்த்தியா... அதான்யா கலைஞர்” என்றார்.

2010-இல் கோவையில் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்றது. அதில் நான் கவிஞர் வாலியின் தலைமையில், கலைஞர் முன்னிலையில் கவியரங்கத்தில் கவிதை பாடினேன். என்னுடைய கவிதையை வாசித்து முடிக்கும்போது

**‘வீடு வரை உறவு,**
**வீதி வரை மனைவி,**
**காடு வரை பிள்ளை,**
**கடைசி வரை கலைஞர்...’**

என்று முடித்தேன். அரங்கம் கைத்தட்டல்களால் அதை ஆமோதித்தது.

இந்த உலகத்தை ஆள்வதற்கு செங்கோல் தேவையில்லை. எழுதுகோல் போதும் என்பதை நிரூபித்தவர் கலைஞர். அவருடைய பேனாவில் ரோஜாக்களும் பூத்திருக்கின்றன. ரத்தமும் கசிந்திருக்கிறது. இன்பத்திலும் துன்பத்திலும் அவர் இறுக்கமாகப் பற்றியிருந்தது பேனாவை மட்டும்தான். எழுத்தாளர்களுக் கெல்லாம் பேனாவைப் பிடிக்கும். ஆனால், பேனாவுக்குப் பிடித்த ஒரு எழுத்தாளராக கலைஞரே இருந்தார். நான் நினைக்கிறேன், ‘நெஞ்சுக்கு நீதி’யின் ஏழாவது பாகத்தை எங்கோ இருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். ஏனென்றால் அவர் பேனா எழுதுவதை நிறுத்தாது.

....பகிர்வார்கள்

**தொகுப்பு : எஸ்.கதிரேசன்**

## ஆரியர்கள் தூக்கி வரும் ‘அகத்தியர்’!

தமிழின், தமிழரின் தொன்மையைப் பொறுக்க முடியாத பார்ப்பனர்கள் ஒன்று ‘தமிழ் நீஷபாஷை’ என்று இழிவுபடுத்துவார்கள் அல்லது ‘தமிழ் மொழியே சிவபெருமான் உருவாக்கியது. அகத்தியர்தான் தமிழ் இலக்கணத்தை உருவாக்கினார்’ என்று அதை ஆரியத்துடன் இணைத்து கெடுக்கப் பார்ப்பார்கள். இதை ‘அகத்தியன் விட்ட புதுக்கரடி’ என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கிண்டலடித்து எழுதியுள்ளார்.

இப்போது மீண்டும், ‘செம்மொழித் தமிழாய்வு’ நிறுவனத்தில், ‘அகத்தியர் பற்றிய நிகழ்வு’, ‘காசி சங்கமம்’, ‘டெல்லி தமிழ்ச் சங்கம்’, ஒன்றிய கல்வி அமைச்சகத்தின், ‘பாரதிய பாஷா சமிதியும்’, அசாம் தமிழ்ச் சங்கமும் இணைந்து கொண்டாடும் ‘அகத்தியர் விழா’ என்று மீண்டும் அகத்தியரைத் தூக்கிக்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், அகத்தியர் யார் என்பது குறித்து, தமிழறிஞர் பொ.வேல்சாமி, ஃபேஸ்புக் பக்கத்தில் எழுதியுள்ள பதிவு கவனம் பெற்றுள்ளது.

அவரது பதிவில், “பழந்தமிழ் இலக்கியங்கள், தொல்காப்பியத்தில் வருணாசிரம அடிப்படையிலான சாதி எங்கும் முன்னிறுத்தப்பட வில்லை. ‘வருணாசிரமத்தையும்’ ‘சாதியத்தையும்’ இலக்கியப் படைப்பாக ஏற்றுக்கொண்ட ஒரு புதுவிதமான ‘சாதிய இலக்கிய மரபை’ ‘அகத்தியர் மரபு’ என்று பெயர் சூட்டி அழைத்தனர். இந்த வகையான சாதிய இலக்கியப் பண்பைப் ‘பிரபந்த இலக்கிய மரபாக’ உருமாற்றித் தமிழ் இலக்கிய வரலாற்றில் இணைத்தனர். ‘பன்னிரு பாட்டியல்’, ‘வச்சனந்தி மாலை’, ‘நவநீத பாட்டியல்’, ‘சிதம்பரப்பாட்டியல்’, ‘இலக்கண விளக்கப் பாட்டியல்’ போன்றவையும், அவற்றைப் பின்பற்றி, 8–ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பட்ட இலக்கிய நூல்களும் சாதியத்துடன் இணைக்கப்பட்ட அகத்தியர் மரபை தெளிவாக வெளிப் படுத்துகின்றன.

இன்னும் ஒருபடி மேலாகச் சென்று, தமிழின் சிறப்பு எழுத்தான ‘ழ’கரத்தைச் ‘சூத்திர எழுத்து’ என்றும், இதை உருவாக்கியவர் ‘எமதர்மன்’ என்றும் கூறுவதுமான பிற்போக்குத் தன்மைகளை நன்கு புரிந்துகொண்ட ‘குடியரசு’ பத்திரிக்கை, 1931–இல் பேராசிரியர் நமச்சிவாய முதலியாரைக் கொண்டு ‘அகத்தியர் ஆராய்ச்சி’ என்ற விமர்சன நூலை எழுதி வெளியிட்டது. எனவே அகத்தியரைச் ‘சநாதனத்தின் தலைவர்’ என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





பி.டி.செல்லப்பாண்டியன்

### காரில் ஏறும் நேரத்தில் புகைப்படம்!

1995-ஆம் ஆண்டு வாக்கில், கழக வளர்ச்சிக்கு, சூறாவளி சுற்றுப்பயணமாக தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதிக்கு அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது கழகக் கொடியேற்றி வைத்து, எங்களிடையே உரையாற்றிவிட்டு, புறப்பட்ட நேரத்தில் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அருகில் அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்கள்.

**– பி.டி.செல்லப்பாண்டியன்,**
**மாவட்ட அவைத் தலைவர்,**
**தேனி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### பகுத்தறிவுப் பிரச்சாரம் தொடரும்!

1948-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை, 1970-இல் ஓடவைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். சாலைகள் செப்பனிட, 2 லட்சம் ரூபாயும், தேர் பராமரிப்புக்கு 2 லட்சம் ரூபாயும் செலவிடப்பட்டது. தேரோட்ட விழாவில், அமைச்சர் கண்ணப்பன் கலந்துகொண்டார். இதற்கு 2 நாட்களுக்குப் பிறகு, பெரியார் தலைமையில் அமைச்சர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசிய கலைஞர், “பகுத்தறிவுப் பிரச்சாரத்தைத் தொடருவோம், அதேநேரத்தில் பக்திப் பிரச்சாரத்தைத் தடுக்க மாட்டோம்” என்றார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

758

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131